OS 83/2024
வா.சா.1 சிவராஜ் த/பெ ராமன்
நாள் 07.11.2025

<u>**குறுக்கு விசாரணை**</u>

1. நான் 8ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். நான் செஞ்சி வட்டம் எதப்பட்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் பெயிண்டிங் வேலை செய்கிறேன். மாதம் வருமானம் எனக்கு எவ்வளவு வரும் என்றால் ஒரு நாளைக்கு ரூ.1,000/- மாதம் ரூ.30 ஆயிரம் ஆகும். நான் வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்கிறேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் முத்து, சத்தியா ஆகியோரை எப்படி தெரியும் என்றால் ராட்டினமங்கலத்தில் ஜெயச்சந்திரன் வீட்டில் பெயிண்ட் வேலைக்கு சென்ற போது பழக்கம். எத்தனை நாள் பழக்கம் என்றால் 2 வாரம் அல்லது 3 வாரம் பழக்கம். பிரதிவாதிகள் எப்போது என்னிடம் என் வீட்டில் வந்து பணம் கேட்டார்கள் எப்போது நான் பணம் கொடுத்தேன் என்றால் நான் வேலை பார்த்தா ஜெயச்சந்திரன் வீட்டில் கேட்டார்கள் 10.04.2022ல் பணம் கொடுத்தேன். பணத்தை நேரடியாக கொடுத்தேனா என்றால் ஜெயச்சந்திரன் மூலம் கொடுத்தேன்.

2. ரூ.7,50,000/-ஐ எந்த வங்கியில் இருந்து எடுத்து கொடுத்தேன் என்றால் நான் சேர்த்து வைத்திருந்த பணத்தை கொடுத்தேன். பாண்டில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்திருக்கிறார்கள் என்றால் ஜெயச்சந்திரன், விநாயகம் ஆகும். விநாயகம் யார் என்றால் முத்துவின் பக்கத்து வீட்டுக்காரர். பாண்டு யார் எழுதியது என்றால் முத்து எழுதி எடுத்து வந்தார். நான் பாண்டு எழுதியதை பார்த்தேனா என்றால் எழுதி வைத்திருந்ததை பார்த்தேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் தக்க சாட்சிகள் முன்னிலையில் பணம் பெற்றதாக விவரம் சொல்லியிருக்கிறேன் ஆனால் சாட்சிகளின் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ராட்டினமங்கலத்தில் எழுதியதாக விவரம் சொல்லியிருக்கிறேன் யார் வீட்டில் எழுதப்பட்டது என்று குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். பாண்டில் பிரதிவாதிகள் முத்து, சத்தியா கையொப்பம் போட்டதை நான் நேரில் பார்த்தேனா என்றால் பார்த்தேன் நான் பார்க்கும்போது தான் போட்டார்கள்.

3. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ல் உள்ள எழுதியவர் என்ற இடத்தில் உள்ள கையொப்பம் 10.03.2022 தேதியிட்ட முத்து, சத்தியா ஆகியோர் கார்த்திகேயனுக்கு எழுதி கொடுத்த கடனுறுதி சீட்டில் சான்றிட்ட நகலில் உள்ள எழுதியவர் என்ற இடத்தில் உள்ள கையொப்பமும் ஒன்றாக உள்ளது என்றால் சரிதான்.
(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)